உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

அத்துவிதம்.

அத்துவித மெனுஞ்சொல்லை அருமறைகள் வழங்கிடவும்
உய்த்துணர்தல் செய்யாது உரைக்குமுரைப் புரையகல
மெய்ப்பொருளை யுணர்த்துதலால் மெய்கண்டா னெனும்பெயர்கொள்
அத்தனடிக் கமலங்கள் அடியேன்றன் முடிக்கணியே.

வடமொழியில் ந + த்வைதம் என்பது வியாகரணப் படி "ந" என்பதின் ந் கெட்டு அத்வைதம் என வழங்கப் படும். அது தமிழில் அத்துவிதம் என மருவியுள்ளது.

வேதோபநிடதங்களில் வழங்கும் அத்துவிதச் சொல்லைச் சிறந்தனவாகக் கொண்டு வைதிக சமயங்கள் பொருள் விவரித்துள்ளன.

வடமொழியின்கண் உள்ள "ந"கரம் அன்மை, இன்மை, மறுதலை, என்னும் மூன்று பொருள்களைத்தரும்.

தூத்துக்குடி, ஸ்ரீ பாகம்பிரியாள் சமேத சுவாமி ஸ்ரீ சங்கரராமேச்சுரப்பெருமான் திருக்கோயிலில் ஞாயிறுதோறும் நடைபெற்றுவரும் கூட்டுவழிபாட்டில், "சித்தாந்தப் பேராசிரியர்" உயர்திரு. ந. சிவகுருநாத பிள்ளை யவர்களால் "சிவஞானபோத" நூலின் பொருள் கூறப்பட்டுவருகின்றது. அவற்றுள் இரண்டாஞ் சூத்திரம், முதல் அதிகரணத்தில் கூறப்படும் "அத்துவிதம்" பற்றி அவர்கள் கூறியவற்றுள், எனது அறிவு முகந்துகொண்டவற்றை இதன்கண் வெளியிடப் பெறுகின்றது.

எனினும், ஏகம், அத்வைதம் என்பனபோன்ற எண்ணுப் பெயர்மேல் வரும் நகரம், அன்மைப் பொருளையே உணர்த்துமன்றி இன்மை, மறுதலைப் பொருள்களை யுணர்த்துதல் வழக்கின்கண்ணில்லை யென்பது, திராவிட மாபாடிய கர்த்தராகிய சிவஞான முனிவரின் கருத்து.

இங்ஙனமாகவும், ஒருசாரார் இன்மைப் பொருளையே கொண்டு, அத்துவிதம் என்னும் சொல் "இரண்டில்லை" என்னும் பொருள்தரும் என்றும், ஆதலின் பிரமத்தைத் தவிர வேறு ஒருபொருளுமில்லை என்றும், உலகுயிர்கள் கயிற்றில் அரவு போலவும், கிளிஞ்சலில் வெள்ளிபோல வும், கானலில் நீர்போலவும், பிரமத்தினிடத்தில் தோன்றும் பொய்த் தோற்றமே யென்றும், பிரமமும் உலகுயிர்களும் பொன்னும் பணியும்போல் அபேதப் பொருளே என்றும் கூறுவாராயினர்

மற்றொரு சாரார், மறுதலைப் பொருளேகொண்டு, பிரமமும் உலகுயிர்களும் உள்பொருள்கள் எனவும், அவை இருளும் ஒளியும்போல் வேறுவேறாக நிற்கும் எனவும் பேதப்பொருளே கூறுவாராயினர்.

இனி வேறொருசாரார், இன்மைப் பொருளேகொண்டு வேதோபநிடதங்களில் பிரமத்தைத்தவிர உலகுயிர்களைப் பற்றியும் கூறப்படுதலின், அவற்றை இல்பொருளென்றல் பொருந்தாதென்றும், ஆயினும் உலகுயிர்கள் பிரமத்திற்கு அகப்பேதமேயொழிய புறப்பேதம் அன்று என்றும், ஆதலின் பிரமமும் உலகுயிர்களும் சொல்லும் பொருளும்போல் பேதாபேதப் பொருள்கள் என்றும் கூறி, அங்ஙனம் நிற்கும் பிரமம் இரண்டில்லை ஒன்றே என்றும் கூறுவாராயினர்.

இங்ஙனமாக, அத்துவிதச் சொல்லுக்குப் பொன்னும் பணியும்போல் அபேதமேஎன்றும், இருளும் ஒளியும் போல்பேதமே என்றும், சொல்லும் பொருளும்போல் பேதாபேதமே என்றும் வெவ்வேறு கூறப்படுதலின் அவற்றுன் மலையாமைப் பொருட்டு, மெய்கண்டதேவ நாயனர் தாம் அருளிச்செய்த சிவஞானபோதம் இரண்டாஞ் சூத்திரம் "அவையே தானே" என்னும் முதலதிகரணத்துள் உண்மைப்பொருளை விளக்குவாராயினர். அம் முதல் அதிகரணம் "அவையே தானே" (இரட்டுற மொழிந்து) அவையே தானேயாய் என்பது.

இனி, கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று, ஐம் பொறிகளால் அறியப்படுவதாகிய உலகமும், யான் உண்டேன், கண்டேன், துயின்றேன் எனச் சொல்லும் பொழுது உணர்வுக்குப் புலனுகும் உயிரும், படைப்பு, காப்பு, அழிப்பு ஆகிய முத்தொழில்கொண்டு, அங்ஙனம் முத்தொழிற்படுத்துவதாகிய வினைமுதல் ஒன்று உண்டு என அநுமானத்தால் நன்கு அறியப்படுவதாகிய இறைவனுமாகிய முப்பொருள்களும் உள்ளன என்பதும், இல்லன தோன்றுதாகலின், இவை அநாதியாகவே யுள்ளன என்பதும் ஆன்றோர் துணிபு

"பதி பசு பாசம் எனப் பகர்மூன்றில்
பதியினைப்போற் பசு பாச மநாதி". — திருமந்திரம்

"சான்றவர் புகழ்ந்திடத் தக்கவாம் பொருள்
மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன
ஆன்றதோர் தொல்பதி ஆருயிர்த் தொகை
வான்திகழ் தளையென வகுப்ப ரன்னவே." — கந்தபுராணம்

என வரும் பிரமாணங்களால் இதனை நன்கு அறிக.

இங்ஙனம் பலவாற்ருனும் அறியப்படுவதாகிய பதி, பசு, பாசம் (இறை – உயிர் – தளை) என்னும் முப்பொருள்களுள், இறைவன், உலகுயிர்களிடை முற்றும் நிறைந்து சர்வவியாபகமாய் நிற்பன்; உலகுயிர்கள் அந்நிறைவுள்ளடங்கி வியாப்பியமாய் நிற்கும். இறைவன் உயிர்களோடியைந்து நின்று அறிவித்தாலன்றி உயிர்கள் தானே அறியமாட்டா. உலகம், இறைவன் அசைவித்தாலன்றித் தானே அசையமாட்டாது. இறைவன், உயிர் உலகோடு கலந்து நிற்கும் நிலை நம்மால் அறியப்பட்மாட்டாது. இறைவன் அதிசூக்கும அறிவுடைப்பொருளாதலின் என்க

இறைவன், முற்றறிவு, அளவிலாற்றல், இயல்பாகவே பாசங்களினீங்குதல் முதலிய எண் குணங்களையுடைய அதிசூக்கும அறிவுடைப்பொருள். உயிர் அனுதியிலேயே ஆணவ மலத்தால் கட்டுண்டல், அறிவித்தாலன்றி அறியமாட்டாமை, பளிங்குபோல் சார்ந்ததன்வண்ணமுடைமை, அறிவிக்கும் கருவிஅளவில் அறிவதாகிய வசித்திடவரும் வியாபகமுடைமையாதிய குணங்களையுடைய தூல அறிவுடைப் பொருள். உலகம், அறியும் தன்மை, தானே அசையும்தன்மை முதலாயின இல்லாத அறிவில்பொருள்.

இங்ஙனம் வெவ்வேறு மாறுபட்ட இயல்புகளையுடைய முப்பொருள்களும், வியாபக வியாப்பியத்தன்மையால் ஒன்றுசேர்ந்திருப்பினும், ஒருபொருளாகப்போவதில்லை. எனவே, வியாபக வியாப்பியத் தன்மையால், ஒன்று கூடியும், பொருட்டன்மையால் வேறுபட்டும் இருக்கும். இந்நிலையை விளக்குவதற்கே இம்முதலதிகரணம்எழுந்தது என்க.

சிவஞானபோத வார்த்திகம் :-

கட்டு முறுப்பும் காணமும் கொண்டுள்ளம்
இட்டதொரு பேரழைக்க என்னென்றுங்கு—ஒட்டி
அவனுள மா கில்லான் உள மவனு மாட்டாது
அவனுள மா யல்லனுமாம் அங்கு.

இக் "கட்டும் உறுப்பும்" என்னும் வெண்பா, அறிவுப் பொருளாகிய உயிரும், அறிவில் பொருளாகிய உடலும் ஒன்று சேர்ந்திருக்கும் நிலையில், உடலுக்கு இட்ட பெயரான் அழைத்தவழி உயிர் என்னென்று கேட்பதற்குக் காரணம், உயிர் அவ்வுடலை வேற்றுமையின்றித் தான் எனவே கொண்டு இருத்தலான் என்பதே அருத்தாபத்தி அளவையான் அறியப்படும். உயிரும்உடலும் வேறு வேறு பொருள்களாயினும், உயிர், உடலோடு அபேதமாகக் கலந்திருத்தல் போலவே, இறைவனும் உலகுயிர்களோடு அபேதமாகக்கலந்திருக்கின்றான் என்பதனுல் இறைவனது அபேதத்தன்மை தெளிவிக்கப்படுகின்றது. இறைவனும் உலகுயிர்களும் பொன்னும் பணியும்போல் ஒரு பொருளாதலில்லை. ஒருபொருளாயின், பொன்னின் தன்மை பணியிலும் காணப்படுமாறுபோல இறைவன் இயல்பு, உலகுயிர்களிலும் காணப்படுதல் வேண்டும்

இனி, இறைவனும் உலகுயிர்களும் வேறுவேறாக உள்ளன எனப் பேதம் கூறுதலும் அடாது.

சிவஞானபோத வார்த்திகம் :-

ஒன்றென்ற தொன்றேகாண் ஒன்றே பதிபசுவாம்
ஒன்றென்ற நீபாசத் தோடுளைகாண் — ஒன்றின்றால்
அக்காங்க ளின்றும் அகா வுயிரின்றேல்
இக்கிரமத் தென்னு மிருக்கு

"ஒன்றென்ற தொன்றேகாண்" என்னும் இவ்வெண்பாவால் வேதங்களுள் "ஏகம் பிரமம்" எனவும் கூறுமாற்றால் உலகுயிர்களோடு இறைவன் கலப்பின்றி வேறாக நிற்பன் என்பதும் பொருந்தாது. "ஏகம் பிரமம்" என்பதற்குத் தாற்பரியம் "பிரமம் பலவல்ல ஒன்றே" என்பதுதான். இனி "பிரமம் இல்லையாயின் ஒருபொருளுமில்லை" என்பதன் தாற்பரியம், அகரம் கலத்தல் இல்லையாயின் ஏனைய எழுத்துக்கள் தோன்றுதற்கும் ஒலிப்பதற்கும் எங்ஙனம் இயலாவோ அங்ஙனமே இறைவன் கலவாது வேறுநிற்பனாயின் உலகுயிர்கள் தோன்றுதற்கும், இயங்குவதற்கும் இயலாதென்பதை விளக்குவதேயாகும். எனவே, இறைவனும் உலகுயிர்களும் இருளும் ஒளியும் போல் பேதமாக (வேறுவேறாக) நிற்கும் என்பதும் அடாது என்பது விளக்கப்பட்டது

சிவஞானபோத வார்த்திகம் :-

"பண்ணையும் ஓசையும்போலப் பழமதுவும்
எண்ணுஞ் சுவையும்போ லெங்குமாம் — அண்ணல்தாள்
அத்துவிதமாதல் அருமறைகள் ஒன்றென்னாது
அத்துவிதம் என்றறையு மாங்கு.

"பண்ணையும் ஓசையும்போல்" என்னும் இவ்வெண்பா, இறைவன், பண்ணும் ஓசையும், பழமும் அதன் சுவையும் எங்ஙனம் குணகுணிகளாகக் கலந்திருக்கின்றனவோ அங்ஙனமே எல்லாப் பொருள்களோடும் கலந்து அபேதமாகவும் அவற்றைச் செலுத்துதற்கு பேதமாகவும், எனவே பேதாபேதமாக நிற்பன் என்பதை விளக்குவதற்கு எழுந்தது 'சொல்லும் பொருளும்போல்' பேதாபேதமாய் நிற்பன் என்பதனை இது மறுக்கின்றது. சொல், ஒரு பொருளைச் சுட்டுவதற்கு உரியதேயன்றிப், பொருளோடு கலந்திருப்பதில்லை என்க.

எனவே, அத்துவிதம் ஒரு சம்பந்த விசேடம் என்பதும், இரு வேறு குணகுணிப் பொருள்கள், குணகுணிகள் போல ஒன்ருய்க் கலந்துநிற்கும் சம்பந்தமே அத்துவிதம் என்பதும் தெளிக. தருக்கநூலார் தாதான்மியம், ஐக்கியம், சையோகம் முதலிய பல சம்பந்தங்களைக் கூறினர்களேயன்றி இவ்வத்துவித சம்பந்தம் பற்றிக் கூறினர்களில்லை.

புறச்சமயத் தவர்க்கிருளா யகச்சமயத் தொளியாய்ப்
புகலளவைக் களவாகிப் பொற்பணிபோ லபேதப்
பிறப்பிலதா யிருள்வெளிபோற் பேதமுஞ் சொற்பொருள்போற்
பேதாபே தமுமின்றிப் பெருநூல் சொன்ன
அறத்திறனல் விளைவதா யுடலுயிர் கண்ணருக்க
னறிவொளிபோற் பிறிவருமத் துவித மாகும்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்கலுற்ரும்.

—சிவப்பிரகாசம்.

கண் அருக்கன்—கண்ணெளியும் அருக்கன் ஒளியும் ஒன்று சேர்ந்தே ஒரு பொருளைக் காணப்பெறினும் இரு ஒளிகளும் ஒன்ருவதில்லை என்பதையும், 'அறிவொளி' உயிர் அறிவு பொறிகளோடு கலந்தும் அவற்றை விடயங்களிற் செலுத்தியும் பேதாபேதமாய் நிற்றலையும் விளக்குவதாகும்.

இத் திருவிருத்தத்திற் கூறியவாறு பொன்னும் பணியும்போல் அபேதமில்லாமல் உடலுயிர்போல் அபேதமும்; இருளும் வெளியும்போல் பேதமில்லாமல் கண்ணெளி அருக்கன் ஒளிபோல் பேதமும்; சொற்பொருள்போல்

பேதாபேதமில்லாமல் அறிவொளிபோல் பேதாபேத மாகவும் இங்ஙனம் முத்தன்மைக்கும் பொதுவாக இறைவன் நிற்பன் என்பதனை விளக்குவதே அத்துவிதம் என்னும் சொல்லாற் பெறப்படும் பொருள் என்பதைத் தெளிவாக உணர்ந்துகொள்ளுக.

அபேதவாதம் — கேவலாத்வைதம்
பேதவாதம் — துவைதம்
பேதாபேதவாதம் — விசிட்டாத்வைதம்
இம்மூன்று தன்மைக்கும் பொது—சுத்தாத்வைதம்.
(சைவசித்தாந்தம்)

வாடித்தெரு,
தூத்துக்குடி. } சு. குற்றாலலிங்கம் பிள்ளை,
சித்தாந்த வகுப்பு மாணவன்.

மெய்கண்டதேவர் விரைகழல் வாழ்க.
சிவஞான முனிவர் திருவடி வாழ்க

இது, சித்தாந்தப் போசிரியர்:
திரு. ந. சிவகுருநாத பிள்ளை அவர்களின்
எண்பதாவது ஆண்டுப் பிறப்பு நாள் நினைவு மலராக
நந்தன ஆண்டு ஆடித்திங்கள் ௧௦-ஆம் நாள் (25—7—52)
வெளியிடப்பெற்றது.

சைவப்பிரகாசம் பிரஸ், தூத்துக்குடி.